"அவசர வேலை" "குடும்பக்காரியம்" போன்று கூறப்படும் காரணங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. தொடர்ந்து நான்கு நாட்கள் பள்ளிக்கு வராத மாணவனின் பெயரை வருகைப் பதிவேட்டிலிருந்து நீக்கத் தலைமை ஆசிரியருக்கு அதிகாரம் உண்டு. இவ்வாறு பெயர் நீக்கம் செய்யப்பட்ட மாணவன் மீண்டும் நுழைவுக் கட்டணம் 50 காசுகள் செலுத்தித் தலைமை ஆசிரியரின் அனுமதியின் பேரில் பள்ளியில் சேர்த்துக் கொள்ளப்படலாம்.

பள்ளி வேலை நேரத்தின் போது விடுப்புக்கோரும் மாணவர்கள் நாட்குறிப்புப் புத்தகத்தில் தலைமை ஆசிரியரின் கையொப்பம் பெற்று வகுப்பாசிரியரிடம் தெரிவித்துவிட்டுச் செல்ல வேண்டும்.

தேர்ச்சி அறிக்கை :

பள்ளியில் எல்லாப் பாடங்களிலும் ஓராண்டிற்கு ஆறுமுறை தேர்வுகள் நடைபெறுகின்றன. மூன்று இடைக்காலத் தேர்வுகளும், காலாண்டு, அரையாண்டு, முழு ஆண்டுத் தேர்வுகளும் நடைபெறும். தேர்வின் போது மாணவர்கள் பார்த்து எழுதினாலோ (Copying) அல்லது தேர்வுக்குத் தகாத காரியங்களைச் செய்தாலோ அத்தேர்வு முழுவதும் எழுதுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள். ஒவ்வொரு தேர்வு முடிந்த பிறகும் விடைத்தாள்கள் மற்றும் தேர்ச்சி அறிக்கை (Progress Report) கொடுக்கப்படும். இத்தேர்ச்சி அறிக்கைகளைப் பெற்றோர்கள் கவனமாகப் பார்த்துக் கையொப்பமிட்டு மூன்று நாட்களுக்குள் பள்ளிக்கு அனுப்ப வேண்டும். ஆண்டு முழுவதும் மாணவனுடைய கல்வி வளர்ச்சி, நன்னடத்தை இவற்றைப் பரிசீலித்த பின்னரே தேர்ச்சி முடிவு செய்யப்படும்.

"அவசர வேலை" "குடும்பக்காரியம்" போன்று கூறப்படும் காரணங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. தொடர்ந்து நான்கு நாட்கள் பள்ளிக்கு வராத மாணவனின் பெயரை வருகைப் பதிவேட்டிலிருந்து நீக்கத் தலைமை ஆசிரியருக்கு அதிகாரம் உண்டு. இவ்வாறு பெயர் நீக்கம் செய்யப்பட்ட மாணவன் மீண்டும் நுழைவுக் கட்டணம் 50 காசுகள் செலுத்தித் தலைமை ஆசிரியரின் அனுமதியின் பேரில் பள்ளியில் சேர்த்துக் கொள்ளப்படலாம்.

பள்ளி வேலை நேரத்தின் போது விடுப்புக்கோரும் மாணவர்கள் நாட்குறிப்புப் புத்தகத்தில் தலைமை ஆசிரியரின் கையொப்பம் பெற்று வகுப்பாசிரியரிடம் தெரிவித்துவிட்டுச் செல்ல வேண்டும்.

தேர்ச்சி அறிக்கை :

பள்ளியில் எல்லாப் பாடங்களிலும் ஓராண்டிற்கு ஆறுமுறை தேர்வுகள் நடைபெறுகின்றன. மூன்று இடைக்காலத் தேர்வுகளும், காலாண்டு, அரையாண்டு, முழு ஆண்டுத் தேர்வுகளும் நடைபெறும். <u>தேர்வின் போது மாணவர்கள் பார்த்து எழுதினாலோ (Copying) அல்லது தேர்வுக்குத் தகாத காரியங்களைச் செய்தாலோ அத்தேர்வு முழுவதும் எழுதுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்</u>. ஒவ்வொரு தேர்வு முடிந்த பிறகும் விடைத்தாள்கள் மற்றும் தேர்ச்சி அறிக்கை (Progress Report) கொடுக்கப்படும். இத்தேர்ச்சி அறிக்கைகளைப் பெற்றோர்கள் கவனமாகப் பார்த்துக் கையொப்பமிட்டு மூன்று நாட்களுக்குள் பள்ளிக்கு அனுப்ப வேண்டும். ஆண்டு முழுவதும் மாணவனுடைய கல்வி வளர்ச்சி, நன்னடத்தை இவற்றைப் பரிசீலித்த பின்னரே தேர்ச்சி முடிவு செய்யப்படும்.

அவர்களை ஒரு தேர்விலிருந்தோ அல்லது எல்லாத் தேர்வுகளிலும் இருந்தோ விலக்கி வைக்கத் தலைமை ஆசிரியருக்கு உரிமை உண்டு.

ஒரே வகுப்பில் ஒரு மாணவனோ, மாணவியோ இருமுறை தவறிவிட்டால் அத்தகையவர்கள் மாற்றுச் சான்றிதழ் (TC) கொடுக்கப்பட்டுப் பள்ளியிலிருந்து நீக்கப்படுவர்.

## ஒழுக்கமும், நன்னடத்தையும்

மாணவ, மாணவியர் அனைவரும் பள்ளிக்குச் சீருடையில் தான் வரவேண்டும்.

வகுப்பறைக்குள் ஆசிரியர் வரும்பொழுதும், பாடம் முடிந்த பின் வெளியே செல்லும் போதும், மாணவர்கள் அனைவரும் ஒன்றாக அவரவர் இடத்திலேயே அமைதியாக நின்று வணக்கம் செலுத்த வேண்டும். ஆசிரியர் அமரச்சொன்ன பிறகே அமர வேண்டும்.

ஒவ்வொரு மாணவனும், மாணவியும் எந்த ஆசிரியரையும் முதன் முதலில் பார்க்கும் பொழுதும் வகுப்பறைக்குள் அவர் வரும்பொழுதும் வணக்கம் செலுத்தவேண்டும்.

ஆசிரியரின் அனுமதியின்றி வகுப்பறையை விட்டு மாணவர்கள் வெளியே செல்லக்கூடாது. வகுப்பு நடைபெற்றுக்கொண்டிருக்கும் பொழுது மாணவர்கள் கண்ட இடங்களில் சுற்றிக்கொண்டு இருத்தல் கூடாது.

நல்லொழுக்கத்திற்கு முரணான நூலையோ, செய்தித் தாளையோ, படங்களையோ யாரும் பள்ளியின் எல்லைக்குள் கொண்டு வரக்கூடாது.

பள்ளிப் பொருள்களுக்கு யாராவது சேதம் உண்டாக்கினால் அதற்குரிய செலவைத் தலைமை ஆசிரியரின் தீர்மானத்தின்படி கொடுத்தாக வேண்டும்.

மாணவர்கள் தங்களுடைய பொருட்களையோ, புத்தகங்களையோ, பணத்தையோ தொலைத்து விட்டால் அதற்குப் பள்ளி பொறுப்பாகாது.

மாணவர்கள் பள்ளிக்கு வெளியே நடக்கக்கூடிய விளையாட்டுக்கள், மற்றைய நூல் நிலையங்கள் மற்றுமுள்ளவற்றிற்கு உறுப்பினர் ஆவதற்கோ, நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ளவோ தலைமை ஆசிரியரின் முன் அனுமதி பெற வேண்டும். இந்த அனுமதியானது பெற்றோர் அல்லது காப்பாளரின் கையொப்பமிட்ட விண்ணப்பம் பெற்ற பின்னர் வழங்கப்படும்.

துப்புரவு :

பள்ளியின் வகுப்புறைகளையும், சுற்றுப்புறங்களையும் தூய்மையாக வைத்திருத்தல் ஒவ்வொரு மாணவனின் கடமை. வகுப்பில் காகிதங்கள் குப்பைகள் இருந்தால் அதற்கென ஒதுக்கப்பட்டிருக்கும் இடங்களில் போட வேண்டும்.

சீருடை :

1995-96 ஆம் கல்வி ஆண்டு முதல் மாணவிகளுக்கு நவீன சுடிதார் உடையும், மாணவர்களுக்குக் காக்கி வெள்ளை ஆடைகளுக்குப் பதிலாகப் புதிய வண்ணச் சீருடைகளும் அனுமதிக்கப்பட்டுள்ளன.

2008-09 ஆம் கல்வி ஆண்டு முதல் மாணவ,மாணவிகளுக்கு விளையாட்டுச் சீருடைகள் வழங்கப்பட்டு வருகிறது.